செய்தி வெளியீடு எண்: 1019 25.12.2009

## தூத்துக்குடி மாவட்டம் திருச்செந்தூர் பேரூராட்சியில் 14 கோடியே 48 இலட்சம் ரூபாய்ச் செலவில் பாதாள சாக்கடைத் திட்டம் செயல்படுத்தப்படும்!

## முதலமைச்சர் கலைஞர் ஆணை!

தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூருக்கு சாதாரண நாட்களில் ஆயிரக்கணக்கிலும், விழாக் காலங்களில் இலட்சக் கணக்கிலும் மக்கள் வந்து போவதைக் கருத்தில் கொண்டு, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் அறிக்கை மற்றும் திருச்செந்தூர் பேரூராட்சி நகர்மன்றத் தீர்மானம் ஆகியவற்றின் அடிப்படையில்; திருச்செந்தூர் பேரூராட்சியில் பாதாள சாக்கடைத் திட்டத்தை 14 கோடியே 48 இலட்சம் ரூபாய்ச் செலவில் நிறைவேற்றுவதற்கு நிர்வாக ஒப்புதல் அளித்து முதலமைச்சர் கலைஞர் ஆணையிட்டுள்ளார்.

• **

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, தலைமைச் செயலகம், சென்னை–9.